செ.வெ.எண் : 10/ ஜுலை நாள் : 04.07.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## சிறுபான்மையினர்களுக்கு டாம்கோ (TAMCO) மூலம் தொழில் கடன் வழங்கும் சிறப்பு முகாம் வருகின்ற 07.07.2017 அன்று நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரத்தில் சிறுபான்மையினர் இனத்தைச் சார்ந்தவர்களுக்கு டாம்கோ (TAMCO) மூலம் தொழில் கடன் வழங்கும் லோன் மேளா சிறப்பு முகாம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் இணைப்பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) மற்றும் மேலாண்மை இயக்குநர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஆகியோரால் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 07.07.2017 அன்று காலை 10.00 மணியளவில் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

தமிழகத்தில் சிறுபான்மையினராக கருதப்படும் இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், புத்த மதத்தினர் மற்றும் ஜெயின் மதங்களைச் சார்ந்தவர்கள் பொருளாதாரத்தில் மேம்பாடு அடையும் வகையில் வியாபாரம் மற்றும் தொழில்கள் செய்வதற்கு பல்வேறு கடன் உதவி திட்டங்களை தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டாம்கோ) கழகம் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தனி நபர் கடன் திட்டம், கல்விக் கடன், வியாபாரம், தொழில் தொடங்கவும் ஏற்கனவே செய்து வரும் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கும் கூட்டுறவு சங்கங்களின் மூலம் கடன் அளிக்கப்படுகிறது. மேலும் சில்லரை வியாபாரம், மரபு வழிச்சார்ந்த தொழில்கள், சேவை சார்ந்த தொழில் நிலையங்கள், இலகுரக போக்குவரத்து வாகன கடன், விவசாயம் தொடர்பான தொழில்கள் செய்ய கடன், கறவை மாடு கடனுதவி, ஆட்டோ கடன், சிறு கடன் வழங்கப்படுகிறது.

சிறுபான்மையினர் இனத்தைச் சார்ந்த மாணவ/மாணவிகளுக்கு அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் இளங்கலை / முதுகலை / தொழிற்கல்வி / தொழில்நுட்ப பட்டய படிப்புகளுக்கு கல்வி கடன் வழங்கப்படுகிறது. கல்வி பருவக் காலம் முடிந்த தேதியிலிருந்து அல்லது அடுத்த 6-வது மாதத்திலிருந்து அல்லது பணியில் அமர்ந்த தேதியிலிருந்து இது எது முந்தியதோ அந்த தேதியிலிருந்து கல்வி கடன் தொகை வட்டியுடன் 60 தவணைகளில் வசூலிக்கப்படும்.

இத்திட்டங்கள் தொடர்பான விளக்கம் பெறவும் பயனாளிகள் விண்ணப்பிக்கவும் வரும் 07.07.2017 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது. கடன் உதவி தேவைப்படும் சிறுபான்மையினர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் தங்களது சாதிச்சான்று, பள்ளிமாற்று சான்று, வருமானச் சான்று, குடும்ப அட்டை, கடன் பெறும் தொழில் குறித்த திட்ட அறிக்கை, ஓட்டுநர் உரிமம் (வாகன கடனிற்கு மட்டும்) ஆதார் அடையாள அட்டை, மற்றும் கூட்டுறவு வங்கி கோரும் இதர ஆவணங்களுடன் நேரில் கலந்து கொள்ளலாம். தகுதியான மனுக்கள் மீது கடன் வழங்க வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்படும்.

இந்த சிறப்பு முகாமில் சிறுபான்மையின மக்கள் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**